மாவட்டங்களுக்கு தேவைப்படுகிற வளர்ச்சிப் பணிகளுக்காக பயன்படுத்தி வந்தார்கள். முன்பு ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை இந்த அவையிலே எழுப்பியபோது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்வதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான், நான் ஏற்கெனவே தெரிவித்ததைபோல, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலே நிதி போதுமான அளவு இருக்கும் பட்சத்தில் நிச்சயமாக இந்தக் கருத்துருவை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளலாம். அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம், இந்தியத் துணைக் கண்டத்திலே, தமிழகத்தில் தான் முதன் முதலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் நீங்கலாக இன்றைக்கு இன்டன்சிபைட் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் என்று சொல்கிற அந்தத் திட்டங்கள் நீங்கலாக இன்றைக்கு அந்த பரவலாக்கப்பட்ட திட்டத்தின் மூலமாக இப்படிப்பட்ட பணிகள் பல்வேறு கிராமப் பகுதிகளிலே எடுக்கப்பட்டு வருகிறது. அதன்மூலமாகவும் இந்தப் பணியை எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதுசம்பந்தமாக அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 538, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

538—

மேல்பட்டியில் ஆதிதிராவிட பெண்கள் விடுதி துவங்குதல்

23824*—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, மேல்பட்டியில் ஆதிதிராவிட பெண்கள் விடுதி துவங்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 மே 3]

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மேல் பட்டியில் ஆதி திராவிடர் நல பெண்கள் விடுதி புதியதாக திறப்பது குறித்து அதன் தேவை மற்றும் நிதிநிலைமைக்கேற்ப ·பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட, பிற்பட்ட மக்களுடைய காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசியுடன், அவருடைய கருணையுடன் மேல்பட்டியில் ஆனந்தமாக கால்நடை மருந்தகம் தந்து மக்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியதற்கு நன்றி. தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் தரப்படும் என்ற ஏசுபிரானின் வார்த்தைகளுக்கு இலக்கணமாகவும், இலக்கியமாகவும் திகழும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பல சமயங்களில் யாரும் கேட்காமலேயே நிறைய தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தாமல் இருக்கவும், தங்களுடைய குடும்பக் கஷ்டத்தை மறந்து விடுதியில் நன்றாகப் படிக்க முடியும் என்பதால், நூற்றுக்கு நூறு வெற்றி கிடைக்கும் என்பதால் மேல்பட்டியில் நல விடுதி இந்த ஆண்டே துவக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995-96*ஆம் ஆண்டே இந்த விடுதி திறக்கப்படும் என்பதை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆசியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல்வேறு நல்ல பணிகளைச் செய்துகொண்டிருக்கிற தமிழகத்தினுடைய ஒப்புயர்வற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து, விடுதியில் தங்கிப் படிக்கிற மாணவ மாணவியர்கள் உதவித் தொகையை உயர்த்தியும், அவர்கள் கல்வித் தரத்தை உயர்த்தியும் மாணவ மாணவிகள் சிறந்த கல்வி பெற உதவி புரிந்து வருகிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இப்படி அளவிட முடியாத நன்மைகள் செய்து வருகிற ஆதிதிராவிட நலத்துறை பற்றி மக்கள் அறிந்துகொள்ள, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சாதனைகளை மக்கள் நல்வாழ்வுத் துறை செய்தியைப்போல, சிறுசிறு திரைப்படங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், ஸ்டிக்கர்கள் போன்றவற்றை, தங்களுடைய சொந்த விளம்பரத்திற்காக புரட்சித் தலைவி அவர்களின்

சாதனைகளை மறுத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு பதிலடியாக இருக்கும் என்பதால், அப்படி துறை விளம்பரப்படுத்துமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கோரிக்கை வரும் என்பதற்காகவே ஆதிதிராவிட நலத் துறை, இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு செய்திருக்கிற சாதனைகள், செய்ய இருக்கிற சாதனைகள் பட்டியல் ஒரு புத்தக வடிவிலே மானியக் கோரிக்கை தினத்தன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *539*, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

539—

பிளவக்கல் அணைப் பகுதியை மேம்படுத்துதல்

78854*—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் தொகுதியில் மாவட்ட சுற்றுலா மையமான பிளவக்கல் அணைப் பகுதியை மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணைப் பகுதி மாவட்ட சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டுள்ளது. *1984–85* ஆம் ஆண்டு அடிப்படை வசதிக்காக ரூ.*2* இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் பிளவக்கல் அணை, கோவிலாறு அணை என்று இரு அணைகள்